1974 மார்ச் 14]

இணைப்பு I.

[367-ம் பக்கத்தில் 419-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

வைகைக் கால்வாய் சீரமைப்பின் கீழ் உள்ள பல்வேறு வேலைத் திட்டங்களுக்கான முன்னேற்றங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பார்த்திபனூர் ரெகுலேட்டர் வேலைகள் :

பார்த்திபனூர் ரெகுலேட்டர் வேலைகள் அநேகமாக எல்லாம் முற்றுப் பெற்று விட்டன. நிரந்தர மின் இணைப்பு வேலைகள், மதகுப் பலகைகளைத் தூக்குவதற்கான இயந்திரப் பொறிகளைப் (**Hoisting Equipment**) பொருத்துதல் ஆகிய வேலைகள் தற்போது நடந்து கொண்டு வருகின்றன.

பார்த்திபனூர் ரெகுலேட்டரின் கீழ் உள்ள கால்வாய்கள் :

இடது புறத்தில் 45 கி.மீ. நீளத்திற்கு வெட்ட உத்தேசித்துள்ள கால்வாயில் 29·00 கி.மீ. நீளம் வெட்டி முடிக்கப்பட்டுள்ளது. வலது புறத்தில் 45 கி.மீ. நீளத்திற்கு வெட்ட உத்தேசித்துள்ள கால்வாயில் 29·00 கி.மீ. நீளம் வெட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விரகனூர் ரெகுலேட்டர் :

ரெகுலேட்டரின் சில பகுதிகளுக்கு ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட இருக்கின்றன. மற்றப் பகுதிகளில் வேலைகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

விரகனூர் ரெகுலேட்டரின் கீழ் உள்ள கால்வாய்கள் :

இடது புறத்தில் 31 கி.மீ. நீளத்திற்கு வெட்ட உத்தேசித்துள்ள கால்வாயில் 5 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் வெட்டுவதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இடது புறக் கால்வாயின் பாக்கி பாகத்திற்கும் வலது புறத்தில் 46 கி.மீ. நீளத்திற்கான கால்வாய் வெட்டுவதற்குமான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

இணைப்பு II.

[374-ம் பக்கத்தில் 423-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

கீழ்க்கண்ட வகைகளைச் சேர்ந்த தொழில்கள் தொடர்பான இறக்குமதி விண்ணப்பங்கள், ஒவ்வொரு தொழிலுக்கெதிராகவும் குறிப்பிடப்பட்டுள்ள இம்மாநில அரசின் " பொருப்பேற்கும் அதிகாரிகளால்' பரிவுரை செய்யப்படுகின்றன :—

(i) கைத்தறித் தொழில் .. மாநிலக் கைத்தறித் துறை இயக்குநர்.